ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2067/25 - 2018 අප්‍රේල් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.19

**2067/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வியாழகிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களின்(திருத்திய) நியதிச் சட்டம்*

*மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டமும் ஒழுங்கும் , உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சக்தி மற்றும் மின் வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சர் எதிரிசிங்ஹ ஆரச்சிகே இசுர தேவப்பிரிய தர்மசேன பெரேரா ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் (திருத்திய) நியதிச் சட்டத்திற்காக மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அனுமதி 2018.03.23 ஆந் திகதி கிடைக்கப் பெற்றுள்ளதனால் அந்நியதிச் சட்டம் 2018.03.23 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*எதிரிசிங்ஹ ஆரச்சிகே இசுர தேவப்பிரிய தர்மசேன பெரேரா,*
*முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,*
*பொறியியல் சேவை, சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சக்தி மற்றும்*
*மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும்*
*சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரும்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்*
*சிராவஸ்தி மந்திரய,*
*கொழும்பு 07,*
*2018, ஏப்பிறல் 18.*

1A - PG4007 - 507 (2018/04)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மேல் மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் (திருத்திய) நியதிச்சட்டம்

*2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச்சட்டத்தைத் திருத்துவதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும்**

*குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.*

01. இந் நியதிச்சட்டம் மேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களுடைய (திருத்த) நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன், மேல் மாகாணத்தின் ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.

*நீண்ட பெயரினைத் திருத்துதல்.*

02. பிரதான நியதிச் சட்டத்தின் நீண்ட பெயருக்குப் பதிலாக பின்வரும் நீண்ட பெயர் உள்ளடக்கப்பட்டு இங்கு திருத்தப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட வங்கி ஒன்றினால் மேற்கொண்டு செல்லப்படும் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினைத் தவிர பொருட்களை அடகு பிடிப்பவர்களின் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அதனோடு இணைந்த இடைநேர் விளைவான அல்லது பிற விடயங்களை ஏற்பாடு செய்வதற்காகவும், 2001 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தினை இல்லாதொழிப்பதற்கான நியதிச் சட்டம் ஒன்றாகும். இந் நியதிச் சட்டம் 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பவர்களின் கட்டளைச் சட்டத்திற்கு மற்றும் 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, அடகு கட்டளைச் சட்டத்தின் சில ஏற்பாடுகளுடன் இயைபற்றதாகும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

03. பிரதான நியதிச் சட்டத்தின் 9 (3) ஆவது உப பிரிவில் "மாகாண சபையின்" என்ற சொற்களுக்குப் பதிலாக "சேமிப்பு" என்ற சொல்லைப் பிரதியிட்டு அப் பிரிவு இங்கு திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

04. பிரதான நியதிச் சட்டத்தின் 18 (3) ஆவது உப பிரிவில் "அந்த முத்திரை வழங்குவதற்குரியதான செலவு பொருட்களை அடகு பிடிப்பவரினால் செலுத்தப்பட வேண்டும்" என்ற சொற்களை அகற்றி அப் பிரிவு இங்கு திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

05. பிரதான நியதிச் சட்டத்தின் 20 ஆவது உப பிரிவின் "இருபத்து நான்கு மாதங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பன்னிரண்டு மாதங்கள்" என்ற சொற்களை பிரதியிட்டு அப் பிரிவு இங்கு திருத்தப்படுகின்றது.

*பிரதான நியதிச் சட்டத்தின் 65 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

06. பிரதான நியதிச் சட்டத்தின் 65 ஆவது உப பிரிவின் "பதிவு செய்யப்பட்ட வங்கி ஒன்று" என்று இடம்பெறும் பொருள் கொள்ளலுக்குப் பதிலாக கீழே காட்டப்படும் பொருள் கொள்ளலை பிரதியிட்டு அப் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

"பதிவு செய்யப்பட்ட வங்கி ஒன்று" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்று என்ற கருத்தாகும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையினைத் திருத்துதல்.*

07. பிரதான நியதிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் "இருபத்து நான்கு மாதங்கள்" என்று இடம் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்திலும் அதற்குப் பதிலாக "பன்னிரண்டு மாதங்கள்" என்று இடம்பெறச் செய்து இரண்டாம் அட்டவணை இங்கு திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படுமிடத்து அவ் வேளையில் சிங்கள மொழிச் சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.*

08. இந் நியதிச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படுமிடத்து அவ் வேளையில் சிங்கள மொழிச் சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.